Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 5, Issue - 1, November 2025 E-ISSN: 2583-0481

# Lifestyle of the People and Water Resources in the Novel *Thoorvai*

**W. Usha Pristrya Wilson,** Tamil Research Scholar, Reg. No.: 22213154022019,
S. T. Hindu College, Nagercoil, Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0008-4705-8417**
**Dr. N. Nisha Navis,** Assistant Professor of Tamil, S. T. Hindu College, Nagercoil,
Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0001-9409-5597**
**DOI: 10.5281/zenodo.18866389**
**Received:** 25 August 2025, **Revised:** 20 September 2025, **Accepted:** 11 October 2025, **Available online:** 26 November 2025.

## Abstract

*The once flourishing village of Urulaikudi has lost its natural state due to extreme climate change and has transformed into a barren land, and the people of this village, who were once self-sufficient, have lost their livelihoods due to the drying up of the lake, which was their primary source of income. The villagers were once proud farmers and are now forced to sell their land to industrialists, who convert them all into factories and leave the villagers without a basic source of income. The villagers are now forced to migrate to cities in search of work where they are exploited as cheap labourers. The fertile land has become a wasteland and the villagers are struggling to survive. In the Tamil novel "Thoorvai", the pathetic situation of the farmers who have lost their lands and become paupers is portrayed in a realistic way. Hence, this study examines how the village of Urulaikudi was affected by climate change and how it lost its natural state.*

**Keywords:** Lifestyle, People, Water Resources, Tamil Novel, *Thoorvai*.

## References

[1] Amutha, A. "Soolaliyal Nokkil *Sool* Novel Koorum Samuga Marrankal." *International Journal of Tamil Language and Literary Studies*, Volume- 6, SPl -1 October – 2023.
[2] Auvai, Su. Duraisami. *Nattrinai Mulamum Vilakka Uraiyum.* Poompukar Patippakam, 2020.
[3] Kamala Murukan. *Porunararruppatai Mulamum Uraiyum.* Sarada Patippakam, 2010.
[4] Darman, Cho. *Thoorvai.* Adaiyalam Patippakam, 2017.
[5] Natarasan, Pi. Ra. *Pattuppattu Mulamum Uraiyum.* Tirumakal Patippakam, 2015.
[6] Natarasan, Pi. Ra. *Tirunavukkaracar Swamikal Tevaram Mulamum Uraiyum.* Mutal Pakuti, Uma Patippakam, Chennai, 2015.
[7] Puliyurkesikan. *Akananooru Mulamum Uraiyum.* Kavita Patippakam, 2020.
[8] Puliyurkesikan. *Kuruntokai Mulamum Uraiyum.* Sri Shenbaka Patippakam, 2017.
[9] Puliyurkesikan. *Patirruppattu Mulamum Uraiyum.* Kappiya Vasippakam, 2022.
[10] Sa. Mokanapriya. "Kalingattupparaniyil Kali Valipatu." *International Journal of Tamil Language and Literary Studies,* Volume 7, July- 2024.
[11] Venkatasami Nattar, Na. Mu. *Akananooru Mulamum Uraiyum.* Gowra Patippakam, 2019.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** Nil
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 5, இதழ் - 1, கார்த்திகை 2056 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# *தூர்வை* நாவலில் நீராதாரமும் மக்களின் வாழ்க்கை முறையும்

**வி. உஷா பிரிஸ்டியா வில்சன்,** தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர்,
பதிவு எண்: 22213154022019, தமிழ்க்கலை ஆய்வகம், தெ. தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில்,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது, திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0008-4705-8417**
**முனைவர் நே. நிஷா நேவிஸ்**, உதவிப்பேராசிரியர், தமிழ்க்கலை ஆய்வகம், தெ. தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில்,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது, திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0001-9409-5597**
**DOI: 10.5281/zenodo.18866389**

**ஆய்வுச் சுருக்கம்**

*செழுமையான உருளைக்குடி கிராமம் காலநிலை மாற்றத்தின் காரணமாக தன் இயல்பு நிலையை இழந்து உருமாறி கரிசல் காடாக காட்சியளிக்கிறது. உருளைக் குடி கிராம மக்களின் நம்பிக்கைகளும் வழிபாடுகளும் இயற்கையோடு இணைந்து காணப்பட்டது. இந்த கிராம மக்களின் வாழ்வாதாரமாக திகழ்ந்த கண்மாய் வற்றியது. இதனால் உருளைக்குடி கிராம மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்தனர். செழிப்பான நிலங்களை விற்று விடுகின்றனர். சம்சாரிகள் விற்ற நிலங்களை தீப்பெட்டி தொழிற்சாலைகளாக உருமாற்றம் செய்யும் அவல நிலை ஏற்படுகிறது. விவசாய நிலங்கள் கரிசல் காடாக மாறியதால் கிராம மக்கள் தங்கள் பிழைப்பிற்காக நகரங்களை நோக்கி செல்கின்றனர். நகரங்களில் அடிமைகளாக வேலை பார்க்கும் அவல நிலை இம்மக்களை கவலைக்குள்ளாக்கியது. "தூர்வை" என்ற தமிழ் நாவலில், தமது நிலங்களை இழந்து ஏழைகளாக மாறிய விவசாயிகளின் பரிதாபகரமான நிலைமை யதார்த்தமாக சித்தரிக்கப்பட்டுள்ளது. எனவே, செழிப்பான கிராமமான உருளைக்குடி கால நிலை மாற்றத்தின் மூலம் கரிசல் காடாக மாறியது என்பதை "தூர்வை" நாவல் வழி அறியலாகிறது.*

**குறிப்புச் சொற்கள்:** வாழ்க்கை முறை, மக்கள், நீர்வளம், தமிழ் நாவல், *தூர்வை.*

## முன்னுரை

ஒரு நிலவுடைமைச்சமூகம் தொழில் மய சமூக மாற்றத்திற்கு உள்ளாக்கப்படும் போது எப்படிப்பட்ட பிரச்சனைகளையும், போராட்டங்களையும் சந்திக்கிறது என்பதற்கான உள்ளடக்கமே "தூர்வை" நாவல் ஆகும். அச்சமூகத்தின் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும், வழக்காறுகளையும் வலுவாக நிலைநாட்டுகிறார் ஆசிரியர் சோ.தர்மன். செழுமையான ஒரு தலித்திய வாழ்வியலை எடுத்துரைக்கும் நாவலாக காணப்படுகிறது. மினுத்தான் பண்ணையாருக்கு நிகராக ஒரு சம்சாரியாக திகழ்கிறான். பிற சாதி மக்கள் பார்க்கக்கூடிய அளவிற்கு நிலபுலனுடனும் விவசாய நுட்பங்களையும், கற்றுணர்ந்தவனாகவும் திகழ்கிறான். இரண்டு தலைமுறைகளாக உருளைக்குடி கிராமம் விவசாய நிலங்களுடனும் வீடு வாசல் என்று வசதியாக வாழ்ந்த மக்கள் காலநிலை மாற்றத்தினால் கண்மாயில் நீர் வற்றி விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. இதனால் தங்கள் நிலபுலன்களை கங்காணி என்பவனிடம் விற்றுவிட்டு இடம் பெயரும் நிலை ஏற்பட்டது. செழிப்பான நிலமாக இருந்த உருளைக்குடி கிராமம் தீப்பெட்டி தொழிற்சாலைகளாகவும், சாக்கு தொழிற்சாலைகளாகவும் மாறும் நிலையை சித்தரிக்கும் நாவல் தூர்வை.

## கண்மாய்

மனித முயற்சி இன்றி இயற்கையாகவே சூழ உள்ள உயர் நிலத்தால் அடைக்கப்பட்ட நீர்நிலை கண்மாயாகும். சுனை, கயம், பொய்கை ,ஊற்று என்பன தானே நீர்க்கசிந்த நிலப்பகுதிகளாகும். குட்டை மழை நீரின் சிறிய தேக்கமாகும். குளிப்பதற்கு பயன்படும்

நீர்நிலை “ஊருணி” எனவும் ஏர் தொழிலுக்கு பயன்படும் நீர் நிலை “ஏரி” என்றும் வேறு வகையாலன்றி மழை நீரை மட்டும் ஏந்தி நிற்கும் நிலையினை “ஏந்தல்” என்றும் கண்ணார்களை உடையது “கண்மாய்” என்றும் தமிழர்கள் பெயரிட்டு அழைத்தனர். ( தமிழ் விக்சனரி) கண்மாய் என்பது பெரும்பாலும் வறண்ட பூமியில் மழை நீரை சேமித்து அதைக் கொண்டு பாசனத்திற்கும் குடிநீருக்கும் பயன்படுத்தவும் வெட்டப்படும் ஓர் நிலை ஆகும். கண்மாயை பேச்சு வழக்கில் 'கம்மா' என்றும் அழைப்பர். கண்மாய் என்பது பாண்டிய நாட்டு கிராமங்களில் அமைக்கப்பட்ட மழைநீர் சேமிக்கும் அமைப்பு முறையாகும். பாண்டிய நாட்டில் பெரும் பகுதிகளில் ஆறுகள் இல்லாத காரணத்தினால் மக்களின் குடிநீர் தேவைகளுக்கான காரணத்திற்காகவும், பாசன வசதிக்காகவும் மன்னர்கள் மற்றும் செல்வந்தர்கள் ஒவ்வொரு கிராம பகுதிகளிலும் கண்மாய்களை வெட்டினர். இதுவே கண்மாயின் அமைப்பாகும்.

உருளைக்குடி கிராம மக்களின் உயிர்நாடியாக இருப்பது ஊர் கண்மாயாகும். கண்மாயை நம்பியே கிராம மக்கள் வாழ்வாதாரம் அமைகிறது. கிராம மக்கள் கண்மாயை போற்றி பாதுகாத்தனர் அதனை வழிபாடும் செய்துள்ளனர். மழை நீரை மக்கள் கண்மாய்களில் சேகரித்துள்ளனர். இதே போல் மழை நீர் சேகரிப்பை பற்றி,

**பனித்துறைப் பெருங்கடல் இறந்துநீர் பருகிக்**
**காலை வந்தென்றால் காரே (அகநானூறு, பா. 183)**

என்ற அகநானூறு பாடல் கூறுகிறது. மழை பொழிவதற்கு இன்றியமையாமை இரண்டு அவை கடலும், சூரியனும் நீரில் பெரும் பகுதி கடலிலே காணப்படுவதால் அந்நீர் சூரியன் மூலம் நீராவியாக்கப்பட்டு மேகங்களாக உருப்பெறுகின்றன. அம்மேகங்கள் காற்று வீசுவதன் மூலம் மலைகளில் மோதி மழையாக பொழிகின்றன என சங்க இலக்கிய நூல் கூறுகிறது. காற்று வீசும் திசைக்கு குறுக்காக உள்ள மலைகள் மேகத்தை மழை பொழிய விடாமல் தடுப்பதையும் சங்க காலப் புலவர்கள் கூர்ந்து கவனித்துள்ளனர் என்பதை,

**நளிக்கடல் முகந்து சரிதக இருளி**
**கனைப்பெயல் பொழிந்து (நற்றிணை, பா. 289)**

என பாடல் மூலம் அறியமுடிகிறது. உருளைக்குடி கிராமத்தில் காணப்படும் கண்மாய் ஏழும் பொதுவான கண்மாயாகும். இங்கிருந்து தான் மற்ற ஊர்களுக்கு நீர் செல்கிறது. கண்மாயை பாதுகாக்கும் பணியை 'நீர்ப்பாய்ச்சி' என்பவன் செய்து வருகிறான். கண்மாயை பாதுகாப்பது தண்ணீரை தானியங்களாக மாற்றி சம்சாரிகளின் கையில் ஒப்படைக்க வேண்டிய கடமையும் நீர்ப்பாய்ச்சிடமே இருந்தது. மழை நீரை வீணாக்காமல் அனைத்தையும் சேமித்து வைப்பது நீர்ப்பாய்ச்சியின் முக்கியமான கடமையாகும். மழை எப்பொழுது வரும் என்பதையும் நீர்ப்பாய்ச்சி நன்கு தெரிந்திருந்தான்.

**வளிபொரு மின்னொடு வான் இருள் பரப்பி**
**விளிவுன்று கிளையொடு மேல்மலை முற்றி**
**தளி பொழி சாரல் தமர்மலர் தாஅய் (பதிற்றுப்பத்து, பா.12)**

என்று பதிற்றுப்பத்து குறிப்பிடுகிறது. எல்லா மேகங்களிலும் நீர் நிரம்பி இருக்காது. சில மேகங்களில் குறைவாகவும் சில மேகங்களில் நீர் நிறைந்தும் காணப்படும். நீர் குறைந்த அல்லது நீர்மேகத்தை, “பெயில் உலர்ந்துதெழுந்த பொங்கல் வெண்மலை” என்றும் நீரில்லாமல் தாழ்ந்து செல்லும் மேகத்தை “கடுஞ்சூழ் மகளிர்” என்றும் சங்க புலவர்கள் முறையே தம் நெடுந்தொகையிலும், குறுந்தொகையிலும் குறிப்பிட்டுள்ளனர். நீர்ப்பாய்ச்சி எந்த காலகட்டத்தில் எத்தனை நாள் மழைப்பொழியும் என்பதைப் பற்றிய அறிவையும் பெற்றுள்ளான். வடகிழக்கு பருவமழை, தென்மேற்கு பருவமழை குறித்தும் ஆசிரியர் நாவலில் கூறியுள்ளார். இதே போல் அகநானூற்றிலும்

**கடல் முகந்து கொண்ட காமஞ்சூழ்**
**மாமழை சுடர் நிமிர்**

**மின்னொடு வலன் ஏர்பு (அகநானூறு, பா. 43)**

என்ற பாடல் மூலம் கடலில் உருவான மழை மேகம் மேற்கு நோக்கி நகர்வதாக கூறியுள்ளார். இதில் வடமேற்கு பருவமழை பற்றி கூறப்பட்டுள்ளது. பாசனத்திற்கும் தண்ணீர் தேவை, நீர்ப்பாசனத்திற்கு போதிய தண்ணீர் இல்லை என்றால் உணவு தானிய உற்பத்திகள் நின்றுவிடும். இப்படி மனித வாழ்வின் இன்றியமையாத தேவையாகி விடப்பட்ட தண்ணீரை குளம், ஆறுகள் என பல வழிகளில் மக்கள் பெறுகின்றனர். ஆனால் மழை நின்று விட்டதால் கண்மாய் வற்றி உருளைக்குடி கிராம மக்கள் தங்கள் வாழ்வாதாரங்களை இழந்து பட்டணங்களுக்கு புலம்பெயரும் நிலை ஏற்படுகிறது.

**தெய்வ நம்பிக்கைகளும் வழிபாடும்**

தமிழர்கள் எப்பொழுது தனித்தனிக் குடும்பங்களாக வாழ தொடங்கினார்களோ, அப்பொழுது அவர்களிடம் இறைநம்பிக்கை ஏற்பட்டது. மனிதர்களின் மனதில் தோன்றிய அச்ச உணர்வே தெய்வ நம்பிக்கையை உண்டாக்கியது எனலாம். எனினும் தெய்வ நம்பிக்கை தோன்றிய காலத்தை கணக்கிட முடியாது. தொல்காப்பியர் காலத்திலேயே பல தெய்வ வழிபாடுகள் இருந்துள்ளதை அகநானூற்றில்,

**மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம் புனல் உலகமும்**
**வருணன் மேய பெர மணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய மறையார் சொல்லவும் படுமே (அகநானூறு, பா. 5)**

என்ற பாடல் மூலம் திருமால், முருகன், இந்திரன், வருணன் போன்றவர்களின் தெய்வ வழிபாடுகள் இருந்துள்ளன என்பதை அறியமுடிகிறது. உருளைக்குடி கிராம மக்கள் தெய்வ வழிபாட்டில் வைத்த நம்பிக்கையையும் அதன் நிமித்தம் அவர்கள் செய்த வழிபாடுகள் குறித்தும் இந்நாவலில்,

> **மினுத்தான் மகனுக்கு காதுகுத்தி நேமிக்கம் போட்டிருந்தார்கள் குலதெய்வம் எப்போதும் வென்றான் சோலை சாமி கோயில், சித்திரை பிறந்து விட்டால் எண்ணிக்கொண்டே பதினெட்டு நாள், பதினெட்டாம் பெருக்கு ரொம்ப விசேஷமா இருக்கும். சித்திரை பிறந்து விட்டாலே ஊரில் இதே பேச்சாகத்தான் இருக்கும் இருளாண்டிக்கிழவன் உறங்கவே மாட்டான் அவனிடம் கேட்டால் எல்லாமே அத்துபடி (தூர்வை, பக். 40)**

என்ற சோ.தர்மன் கூற்றில் இருந்து அறியமுடிகிறது.

> **நமது மனித இனம் தோன்றிய காலம் முதல் வழிபாடு இருந்து வருகிறது. வழிபாடு எனப்படுவது நம்பிக்கையின் அடிப்படையில் தோன்றியதாகும். மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றை நிறைவு செய்யவே வழிபாடு தோன்றியிருக்க வேண்டும். முதலில் மனிதன் இயற்கையையே வழிபட தொடங்கினான். சங்க இலக்கியத்தில் தமிழர்கள் இயற்கையை தான் வழிபட்டார்கள். (ச. மோகனப்பிரியா, ப. 45)**

ச. மோகனப்பிரியா வழிபாடு குறித்து தனது ஆய்விதழில் குறிப்பிட்டு இருக்கிறார்.

சோலைசாமி கோவிலுக்கு என்று ஒரு வரலாற்றினை உருளைக்குடி கிராம மக்கள் வைத்திருக்கின்றனர். சோலைசாமி கோவிலுக்குக் கொண்டு செல்லும் அனைத்து உணவுகளையும் தின்று தீர்க்க வேண்டும். மீதியை வீட்டிற்கு எடுத்து வரக்கூடாது. சோலைசாமி கோவிலில் திருட்டு நடந்ததாக அந்த கோவில் வரலாறே இல்லை. தெய்வத்திற்கு அந்த அளவு மக்கள் பயந்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது. அக்கால மக்கள் தமக்கு மேம்பட்ட சக்தி ஒன்று உண்டு என்று என்ன தொடங்கிய நிலையில் மரங்களையும்,

கற்களையும் கடவுளாக எண்ணினர். உருவமற்ற கடவுளுக்கு தம் மனதில் தோன்றிய வடிவங்களைக் கொடுத்து வழிபட்டுள்ளனர். இதுவே சிறு தெய்வ வழிபாடாக மாறியது. சிறுதெய்வ வழிபாடு என்பது கிராமங்களை சார்ந்த மக்களின் வாழ்வியல் நடைமுறைகளைப் பிரதிபலிக்கும் பண்பாட்டுக் கூறாகும். இத்தெய்வங்கள் மலைகள், மரங்கள், நீர்நிலைகளில் உறைவதாக மக்கள் நம்பி வழிபட்டனர். சங்க இலக்கியத்தில் தெய்வ வழிபாட்டினை பெருதெய்வம் என்றே அழைத்துள்ளனர். இடைக்காலத்தில் வந்த பக்தி இலக்கியத்தில் 'சிறு தெய்வம்' என்ற சொல் இடம் பெற்றுள்ளது.

**இருநிலத்தில் எமக்கு கெதிரா வாருமில்லை**
**சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோம் அல்லோம் (தேவாரம், பா. 5)**

தேவாரப் பாடலில் திருநாவுக்கரசர் சிறுதெய்வத்தினை பற்றி கூறியிருக்கிறார். இதே கருத்தினையே ராமலிங்க அடிகள் “நலிவுறு சிறு தெய்வம்” (தேவாரம், பா. 59) என விளக்கம் தந்துள்ளனர். இவ்விரு அடியார்களும் சிறுதெய்வ வழிபாடு அக்காலத்திலும் இருந்துள்ளது என்பதை குறிப்பிடுகின்றனர். உருளைக்குடி கிராம மக்கள் பல தெய்வங்களை வழிபட்டு இருக்கின்றனர். அய்யனார் சாமி வழிபாடு, இறந்த மனிதனை வழிபடுவது, காளியம்மன் வழிபாடு என பல வழிபாடுகளும் காணப்பட்டுள்ளன என்பதை இந்நாவலில்,

**சித்திரை மாதம் பதினெட்டாம் பெருக்கு முடிந்து விட்டால் வைகாசி மாதம் காளியம்மன் கோவில் பொங்கல் பிரமாதமாய் நடக்கும் அநேக ஊர் பொங்கல்கள் சித்திரையிலே முடிந்து விடும். கடைசி வைகாசி பொங்கல் ஆகையால் கூட்டம் அலைமோதும் மூன்று நாளும் கிராமமே திக்கு முக்காடி போகும். கவுரு குத்து, அக்னி சட்டி, கிடாய் வெட்டு, அரிவாள் ஏற்றம் என்று நாளா ஊர்சனமும் நிறைந்து கிடக்கும். (தூர்வை, ப. 46)**

என்பதை சோ. தர்மன் கூற்றில் இருந்து அறியமுடிகிறது. உருளைக்குடி கிராமங்களின் பெண் தெய்வ வழிபாடுகளை போன்று பெரும்பாணாற்றுப்படையில் கானாமர் செல்வியின் அருளால் மன்னன், நன்னன் வெண்கால்களை உடைய குதிரைகளைப் பெற்றமை பற்றி கூறப்பட்டுள்ளது. இத்தெய்வத்தைப் *பொருணராற்றுப்படை* காடுறை கடவுள் என்றும் மணிமேகலை காடாமர் செல்வி என்றும் கூறுகின்றன. இதனை,

**வலைப்வலந்தன்னன் மென் நிழல் மருங்கின்**
**காடுஉறை கடவுட் கடன் கழிப்பிய பின்றை (பொருநராற்றுப்படை, பா. 49, 50)**

என்ற பாடல் மூலம் அறியமுடிகிறது. காடுகளில் தெய்வம் உறைவதாலும் தெய்வத்தின் அருகில் நீர் நிலைகள் இருக்கின்றன. இதுவும் பெண் தெய்வம் தான். உருளைக்குடி கிராம மக்கள் மாடு வாங்குவதற்கு முன்பும் சாமியிடம் உத்தரவு கேட்ட பின்பே வாங்க சென்றிருக்கின்றனர். காளியம்மன் அருள் சொல்லி நேமிக்கம் (நேர்த்திக்கடன்) போடும் சாமி சொல்லும் நேமிக்கங்களை மக்கள் பக்தியுடன் நிறைவேற்றியுள்ளனர். உருளைக்குடி கிராம மக்கள் கார்த்திகை மாதம் பிறந்ததும் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் கோவிலில் விளக்கு ஏற்றுவார்கள். அந்த வெளிச்சத்தில் ஊரே பிரகாசமாய் காணப்படும். சுடுகாட்டிலும் தங்களுடைய முன்னோர்களை புதைத்த இடத்திலும் சிறிய வீடு செய்து அதனுள் விளக்கு வைத்து வழிபட்டுள்ளனர். இதன் மூலம் கிராம மக்களின் நம்பிக்கைகளையும் வழிபாடுகளையும் அறிந்துகொள்ள முடிகிறது.

**காலநிலை மாற்றம்**

ஒரு சராசரி பருவ நிலையில் ஏற்படும் மாறுதலோ, ஒரு சராசரி பருவ நிலையில் சுற்றிலும் உள்ளதான நிகழ்வுகளின் மாற்றமோ, காலநிலை மாற்றம் ஆகும். காலநிலை மாற்றம் என்பது ஒரு குறிப்பிட்ட பகுதி சார்ந்தோ அல்லது புவி முழுமையிலும் ஏற்படுவதாகவோ இருக்கலாம். இது மனித நடவடிக்கைகள் காரணமாகவும் உருவாகலாம். உருளைக்குடி கிராமத்தில் பருவமழை பொய்த்து போன காரணத்தினால் கண்மாயில் நீர் வற்றி மிகுந்த வறட்சி ஏற்பட்டது. வறட்சியின் காரணமாக மக்கள் தெய்வங்களுக்கு வழிபாடுகளையும்

நடத்தினர் மழை பொழியவில்லை. ஆடு, மாடுகளும் தண்ணீர் இல்லாமல் அவதிப்பட்டன. இதனை இந்நாவலில்,

**மழையும் இல்ல தண்ணியும் இல்ல**
**மழக்கஞ்சியோ மழக்கஞ்சி**
**ஆடு மாடு க்கு தண்ணி இல்ல**
**அம்மங் கஞ்சியோ அம்மங் கஞ்சி (தூர்வை, பக். 156)**

அந்த வருஷம் மழை முழுமையாக நின்று விட்டது. ஒரு கைப்பிடி அளவு கூட வெள்ளாமையின்மையால் வீட்டை அடைத்துக் கொண்டு நின்ற குலுக்கைகளை மக்கள் வெளியே தூக்கி போட்டு விட்டார்கள். ஆடையிலும், கோடையிலும் நிறைந்து இருந்த குலுக்கைகள் இன்று தெருவில் வீசப்பட்டன. ஊரில் மழையைப் பற்றிய பேச்சுக்கள் தான் எப்பொழுதும் உலாவின. மக்கள் பட்டணங்களுக்கு வேலைக்கு செல்ல ஆரம்பித்தனர். சொந்த கிராமத்தில் விவசாயம்செய்த மக்கள் வெளியிடத்தில் தினக்கூலிகளாக வேலை செய்யும் நிலை ஏற்பட்டது. ஊரில் கங்காணி என்பவன் அனைவரின் நில புலன்களையும் வாங்கி தீப்பெட்டி தொழிற்சாலையை உருவாக்கினான். ஊரில் உள்ள பெண்கள் அவனிடம் வேலைக்கு சென்றனர். வெளியூருக்கு குடும்பத்துடன் சென்ற பெண்களும் அங்கு வேலை பார்க்கும் நிலைக்கு தள்ளப்பட்டனர் என்பதை சோ. தர்மன் நாவலில் இருந்து அறியமுடிகிறது.

**நீர் நிலைகளில் நீரில்லாததால் நிலத்தடி நீர்மட்டம் குறைகிறது நீர் இல்லாமல் விவசாய நிலங்களின் அளவு இன்று குறைந்து வருகிறது விவசாய நிலங்கள் பயன்பாட்டிற்கு மாறி வருகின்றன. (அ. அமுதா, பக். 26)**

இன்றைய காலகட்டத்திலும் நீர்நிலைகளின் வரவு அதிகம் இல்லாதது நாளும் கண்மாய்களைப் பாதுகாக்கும் ஆட்கள் இல்லாதது நாளும் விவசாயம் அழிந்து வருகிறது என்பதை அறிய முடிகிறது.

**ஊரில் அநேக பேர் இளவட்டங்களும் சம்சாரிகளும் கூட ஆந்திராவிற்கு வேலை செய்வதற்கு புறப்பட்டு போய்விட்டார்கள் கால்நடைகள் குறைந்து போய் அருள் கெட்டுப் போனது ஊரை சுற்றி இருந்த பெரிய பெரிய படைப்புகள் காணாமல் போய்விட்டன ஊரின் செருக்கை காணாமல் போய்விட்டது (தூர்வை, ப. 159)**

என்ற கூற்றின் மூலம் அவர்களின் நிலையை அறியமுடிகிறது. கிராமப்புறங்களில் இன்றும் இத்தகைய நிலை தான் காணப்படுகிறது. நவீன வளர்ச்சியின் காரணமாக இன்றைய காலகட்டங்களில் விவசாயத்தை மக்கள் தொலைத்து விட்டனர் நீரின் தேவைகளை புரிந்து கொள்ளாமலும், சேமிக்கும் திறனை வளர்க்காமலும் இன்றைய காலங்களில் நீர் தட்டுப்பாடு அதிகம் காணப்படுகிறது.

**முடிவுரை**

“**விசும்பின் துளிவீழின் அல்லாமல் றாங்கேபசும்புல் தலை காண்ப அரிது**” என்ற வள்ளுவரின் வாக்கு மகத்துவமானது என்பதை இன்றைய சூழலில் உணர முடிகிறது. அனைத்து உயிர்களுக்கும் நீர் முக்கியமான ஒன்றாகும். மழை நீரைத் தவிர குளம், ஏரி, குட்டைகளிலும் நீர் சேமிக்கப்பட்டது. மழைநீர் வீணாகாமல் தடுப்பதற்காக கண்மாய் அமைத்து அதில் நீரை பாதுகாத்தனர். காலநிலை மாற்றத்தின் காரணமாக மழை இல்லாமையாலும், நிலம் வறண்டு விவசாய நிலம் கரிசல்காடாக காணப்பட்டதாலும் சம்சாரிகள் அனைவரும் ஊரை விட்டு வெளியேறிவிட்டனர். இன்றைய காலகட்டத்திலும் நீரின் தேவைகள் அதிகமாக காணப்படுகிறது. நீரை சேமிக்கும் குளங்களை மக்கள் சரியாக பராமரிக்காத்ததால் குளம், குட்டைகள், நீர்த்தேக்கங்கள் பாழடைந்து போய்விட்டன. குளம், என எதுவும் மக்கள் இடையே இல்லை. இதனால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு நிலங்கள் உருமாறுகிறது. மேலும், அரசாங்கத்தின் அலட்சியத்தினாலும், சரியாகதூர்வார ஆட்களை

நியமிக்காமல் இருப்பதாலும் நீர் பற்றாக்குறை ஏற்படுகிறது என்பதை தூர்வை நாவல் மூலம் அறியமுடிகிறது.

**குறிப்புகள்**

[1] அமுதா. அ "*சூழலியல் நோக்கில் சூல் நாவல் கூறும் சமூக மாற்றங்கள்.*" *தமிழ் மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி- 6, சிறப்பிதழ் -1 அக்டோபர் – 2023.

[2] ஔவை. சு. துரைசாமி *நற்றிணை மூலமும் விளக்க உரையும்.* பூம்புகார் பதிப்பகம், 2020.

[3] கமலா முருகன், *பொருணராற்றுப்படை மூலமும் உரையும்.* சாரதா பதிப்பகம், 2010.

[4] தர்மன். சோ *தூர்வை.* அடையாளம் பதிப்பகம், 2017.

[5] நடராசன், பி.ரா. *பத்துப்பாட்டு மூலமும் உரையும்.* திருமகள் பதிப்பகம், 2015.

[6] நடராசன், பி. ரா. *திருநாவுக்கரசர் சுவாமிகள் தேவாரம் மூலமும் உரையும்.* முதல் பகுதி, உமா பதிப்பகம், சென்னை, 2015.

[7] புலியூர்கேசிகன். *அகநானூறு மூலமும் உரையும்.* கவிதா பதிப்பகம், 2020.

[8] புலியூர்கேசிகன். *குறுந்தொகை மூலமும் உரையும்.* ஸ்ரீ செண்பா பதிப்பகம், 2017.

[9] புலியூர்கேசிகன். *பதிற்றுப்பத்து மூலமும் உரையும்*, காப்பியா வாசிப்பகம், 2022.

[10] ச. மோகனப்பிரியா. "*கலிங்கத்துப்பரணியில் காளி வழிபாடு.*" *தமிழ் மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ்*, இதழ் 7, ஜூலை- 2024.

[11] வேங்கடசாமி நாட்டார், ந. மு. *அகநானூறு மூலமும் உரையும்.* கௌரா பதிப்பகம், 2019.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.